[27th March 1969

மாண்புமிகு திரு. மா. முத்துசாமி : தானம் கொடுக்கிற மாட்டை பல்லைப் பிடித்துப் பதம் பார்க்கக் கூடாது என்று சொல்வார்கள். பயனளிக்கும் நிலங்கள் எவ்வளவு என்ற விவரம் இல்லை. தனிக் கேள்வி கேட்டால் விவரம் கொடுக்கலாம்.

Madras Corporation Elections.

* 256 Q.—THIRU R. KRISHNASWAMY NAIDU (on behalf of THIRU N. R. THIAGARAJAN) : Will the Hon. the Minister for Local Administration be pleased to state—

(*a*) the number of riots, stabbing incidents that took place near the counting centres after the Madras City Corporation Elections;

(*b*) (1) the number of persons arrested ; and

(2) the number of persons prosecuted; and

(*c*) the number of persons sentenced ?

மாநகராட்சி தேர்தல்.

திரு. ஆர். கிருஷ்ணஸ்வாமி நாயுடு : திரு. என். ஆர். தியாகராஜன் : சார்பில்): மாண்புமிகு உள்ளாட்சி நிர்வாக அமைச்சர் அவர்கள் கீழ்க் கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்.—

(அ) சென்னை மாநகராட்சி தேர்தல் முடிந்து வாக்கு எண்ணுமிடத் தில் எத்தனை கலகங்கள், கத்திக் குத்துக்கள் நடந்தன ?

(இ) (1) எத்தனை பேர் கைதாயினர் ? (2) எத்தனை பேர் மீது வழக்கு தொடரப்பட்டன ?

(உ) எத்தனை பேர் தண்டனையடைந்தார்கள் ?

மாண்புமிகு திரு. எம். முத்துசாமி : (அ) 1968 அக்டோபரில் நடை பெற்ற சென்னை மாநகராட்சித் தேர்தலின்போது வாக்கு எண்ணுமிடங் களுக்கு அருகில் கத்திக்குத்து நிகழ்ச்சி எதுவும் நடக்கவில்லை. ஆனால் தியாகராயர் கல்லூரியில் வாக்கு எண்ணும் இடத்தின் முன் பொது மக்க ளின் பாதுகாப்பிற்கு ஊறுவிளைவித்து சோடா பாட்டில்களையும், கற்களையும் வீசியெறிந்து கலவரம் ஏற்படுத்தும் நிகழ்ச்சி ஒன்று நடந்தது.

(இ) and (உ) தியாகராயர் கல்லூரி அருகில் ஏற்பட்ட கலவரத்தின் போது மூவர் கைது செய்யப்பட்டனர். இது சம்பந்தமாக வழக்கு ஒன்று பதிவு செய்யப்பட்டது. அதில் மூவரும் தண்டிக்கப்பட்டு குற்றவாளிகள் நன்னடத்தை சட்டத்தின் கீழ் எச்சரிக்கை செய்யப்பட்டனர்.

" Gherao " at Madurai Central Bus Stand.

* 257 Q.—THIRU R. KRISHNASWAMY NAIDU (on behalf of THIRU N. R. THIAGARAJAN) : Will the Hon. the Minister for Co-operation be pleased to state—

(*a*) whether 'Gherao' was observed in January 1968, in the Central Bus Stand at Madurai by parking the taxis in a row across the exit gate thereby blocking the buses from coming out of the bus stand; and

(*b*) if so, the reasons therefor ?